


# SRCAS PULSE

An IQAC Initiative

27th July, 2022





SRCASofficial

www.srcas.ac.in

# IQAC - Faculty Development Programme - Day 3








# மாணவர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்




**நமது கல்லூரி முதல்வர் மற்றும் செயலர் முனைவர் பி.எல்.சிவக்குமார் அவர்களின் அறிவுறுத்தல்கள்:**

இன்றைய மாணவர்கள் எதிர்கால இந்தியாவின் தூண்கள். மாணவர்களை சிறந்தவர்களாக, ஒழுக்கமுடையவர்களாக மாற்றி, சிறந்த குடிமகன்களாக உருவாக்குவது கல்வி நிறுவனங்களின் கடமையாகும். அதை நம் கல்லூரியானது செவ்வனே செய்து வருகிறது. சமூகத்தின் பார்வையில் மதிப்புமிக்க மாணவர்கள், அதை பேணி காக்க வேண்டியது தங்களது கடமையாகும்.

<u>ஆடை கட்டுப்பாடுகள்</u>

- கல்லூரிக்கு வரும் போது மாணவ, மாணவிகள் நேர்த்தியான ஆடைகளை அணிந்து வர வேண்டும்.
- கல்லூரியில் தங்களுக்கு வழங்கப்பட்ட அடையாள அட்டையை எப்போதும் அணிந்திருக்க வேண்டியது அவசியம்.
- மாணவர்கள் காப்பு, செயின், காதில் வளையம் போன்றவற்றைக் கல்லூரிக்கு அணிந்து வரக்கூடாது.
- மாணவர்கள் ஒழுங்கான முறையில் தலைமுடி வெட்டி வர வேண்டும்.
- வகுப்புக்குச் செல்லாமல் வளாகத்திற்குள் சுற்றக்கூடாது.

- குறித்த நேரத்திற்குள் கல்லூரிக்கு வந்து, வகுப்புக்கு ஆசிரியர்கள் வரும் வரை அமைதி காக்க வேண்டும்.
- பாடவேளைக்கு இடையில் ஒதுக்கப்பட்டுள்ள, இடைவேளையின் போது மட்டுமே கேண்டீன் செல்ல வேண்டும்.

## ஹெல்மெட் கட்டாயம்

- இரு சக்கர வாகனங்களில் வருபவர்கள் கட்டாயம் 'ஹெல்மெட்' அணிந்து வர வேண்டும்.
- ஒட்டுநர் உரிமம் பெற்ற பிறகே இருசக்கர வாகனம் ஒட்ட வேண்டும்.
- மாணவர்கள் தங்கள் ஹெல்மெட்டுகளை தாங்கள் பொறுப்பில் பாதுகாக்க வேண்டும். தொலைந்து போனால் கல்லூரி பொறுப்பல்ல.
- சாலை விபத்துகளில் உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் ஹெல்மெட் அணியாமல் சென்றவர்கள் என காவல்துறை தெரிவித்துள்ளது.
- இரு சக்கர வாகனங்களை ஹெல்மெட் அணியாமல் ஒட்டுவதைத் தவிர்க்க வேண்டும்.

**Helmet must for kids aged above 4 in Kovai**

Coimbatore: Police on Tuesday announced that helmets are mandatory for children aged above four years. City police Commissioner V Balakrishnan said several people were taking children on two wheelers without helmets which is dangerous. Meanwhile, a press release said the number of fatal accidents due to non-wearing of helmets doubled this year compared to 2021. According to their data, 42 persons died in 2021 by not wearing helmets and the fatality rate has doubled to 88 in the last six months. ENS

## ராக்கிங் தடுப்பு நடவடிக்கை

- கல்லூரி வளாகத்திற்குள்ளோ, வெளியிலோ முதலாமாண்டு மாணவர்களிடம் 'ராக்கிங்'கில் ஈடுபடக்கூடாது.
- உதாரணமாக, ஒருவரிடம் பெயர் என்ன? என்ற கேட்டால் கூட அது ராக்கிங்.
- 'ராக்கிங்'கில் ஈடுபட மாட்டேன் என்று, உறுதிமொழிப் படிவத்தில் கையொப்பமிட்டு கொடுக்க வேண்டும்.

## போதைப் பொருள்

- போதைப் பொருட்கள் பயன்படுத்துவதோ? அதைப் பயன்படுத்துபவர்களிடம் தொடர்பு கொள்வதோ? தவிர்க்கப்பட வேண்டும்.
- சமூக விரோதிகளின் சட்ட விரோத செயலுக்கு துணை போகக் கூடாது.
- மற்றவர்களின் ஆதாயத்துக்கு உங்களுடைய எதிர்காலத்தைச் சீரழித்துக் கொள்ளக் கூடாது.
- கொரோனா தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கான அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை அனைவரும் கடைபிடிக்க வேண்டும்.

எழுத்து : முனைவர் த.சத்தியசீலன் / படம்: திரு.பி.கீர்த்திவாசன்.

# வாசிப்பில் நேசித்து பேச்சுப் போட்டியில் முதல்பரிசு வெற்றி பெற்ற மாணவனுக்கு பாராட்டு




கோயம்புத்தூர் புத்தகத் திருவிழாவில் நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் முதல்பரிசு பெற்ற பி.எஸ்சி. இயற்பியல் துறை 2-ம் ஆண்டு மாணவரும், தமிழ் மன்ற மாணவருமான செல்வன். க.விமல் அவர்களுக்கு, நமது கல்லூரியின் முதல்வர் மற்றும் செயலர் முனைவர் பி.எல்.சிவக்குமார் பாராட்டு தெரிவித்தார். அருகில் மொழித்துறைத் தலைவர் முனைவர் த.விஸ்வநாதன், தமிழ் மன்ற ஒருங்கிணைப்பாளர் முனைவர் ரா.பிரேம்குமார், இயற்பியல் துறைத்தலைவர் முனைவர் எஸ்.பூங்குழலி, உடற்கல்வி இயக்குநர் முனைவர் கே.வடிவேலு, தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் முனைவர் வி.விஜயகுமார் உள்ளிட்டோர்.

# கலாமுக்கு நினைவஞ்சலி




இந்தியாவின் தலைசிறந்த விஞ்ஞானி, தொழில்நுட்ப வல்லுநர், இந்தியாவின் 11-வது குடியரசு தலைவர், இந்திய ஏவுகணை நாயகன், இந்திய விஞ்ஞான வளர்ச்சியின் தந்தை, சிறந்த ஆசிரியர் மற்றும் அனைவராலும் மதிக்கதக்க அற்புதமான பேச்சாளர், வருங்கால இளைஞர்களின் முன்மாதிரியாக கருதப்படுபவர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம்.

1931-ம் ஆண்டு, அக்டோபர் மாதம் 15-ம் நாள் ஜைனுலாப்தீன்-ஆஷியம்மாவுக்கும் மகனாக இராமேஸ்வரத்தில் பிறந்தார். அப்துல் கலாம் அவர்கள் இராமேஸ்வரத்திலுள்ள தொடக்கப்பள்ளியில் தனது பள்ளிப்படிப்பை தொடங்கினார். ஆனால் இவருடைய குடும்பம் ஏழ்மையில் இருந்ததால், இளம் வயதிலே இவர் தன்னுடைய குடும்பத்திற்காக வேலைக்குச் சென்றார். பள்ளி நேரம் போக மற்ற நேரங்களில் இவர் செய்தித்தாள்கள் விற்பனை செய்தார். இவருடைய பள்ளிப்பருவத்தில் இவர் ஒரு சராசரி மாணவனாகவே வளர்ந்தார்.

தன்னுடைய பள்ளிப்படிப்பை முடித்த பிறகு, திருச்சியிலுள்ள செயின்ட் ஜோசப் கல்லூரியில் பி.எஸ்சி. இயற்பியல் பயின்றார். 1954-ம் ஆண்டு, இயற்பியலில் இளநிலை பட்டம் பெற்றார். 1955-ம் ஆண்டு விண்வெளி பொறியியல் படிப்பை சென்னையிலுள்ள எம்.ஐ.டி.-யில் படித்து, முதுநிலை பட்டமும் பெற்றார்.

1960-ம் ஆண்டு வானூர்தி அபிவிருத்தி அமைத்தல் பிரிவில், விஞ்ஞானியாக தன்னுடைய ஆராய்ச்சி வாழ்க்கையைத் தொடங்கிய அப்துல் கலாம், ஒரு சிறிய ஹெலிகாப்டரை இந்திய ராணுவத்திற்காக வடிவமைத்து கொடுத்தார். பின்னர், இந்திய விண்வெளி ஆராய்ச்சி கூடத்தில் தனது ஆராய்ச்சிப் பணிகளைத் தொடர்ந்த அவர், துணைக்கோள் ஏவுகணைக் குழுவில் செயற்கைக்கோள் ஏவுதலில் முக்கிய பங்காற்றினார்.

1980-ம் ஆண்டு SLV-III ராக்கெட்டைப் பயன்படுத்தி ரோகினி-I என்ற துணைக்கோளை வெற்றிகரமாக விண்ணில் ஏவச்செய்தார். இது அவருக்கு மட்டுமல்லாமல், இந்தியாவிற்கே ஒரு சாதனையாக அமைந்தது. இத்தகைய வியக்கதக்க செயலைப் பாராட்டி மத்திய அரசு இவருக்கு 1981-ம் ஆண்டு இந்தியாவின் மிகப் பெரிய விருதான "பத்ம பூஷன்" விருது வழங்கி கௌரவித்தது. 1963-ம் ஆண்டு முதல் 1983-ம் ஆண்டு வரை, இந்திய விண்வெளி ஆராய்ச்சி கூடத்தில் பல பணிகளை சிறப்பாக செய்த இவர், 1999 ஆம் ஆண்டு "பொக்ரான் அணு ஆயுத சோதனையில்" முக்கிய பங்காற்றியுள்ளார்.

இந்தியாவை அணு ஆயுத வல்லரசாக மாற்றிய ஏ.பி.ஜே. அப்துல் கலாம், ஐந்து ஏவுகணை திட்டங்களில் பணிபுரிந்துள்ளார். அவர், அனைவராலும் இந்திய ராணுவ ராக்கெட் படைப்பின் பிதாவாக போற்றப்படுகிறார்.

2002-ம் ஆண்டு நடந்த குடியரசுத் தலைவர் தேர்தலில் வெற்றி பெற்று, இந்தியாவின் 11-வது குடியரசு தலைவராக 2002 ஜூலை 25-ம் நாள் பதவியேற்றார்.

குடியரசு தலைவராவதற்கு முன், இந்தியாவின் மிகப்பெரிய விருதான "பாரத ரத்னா விருது" மத்திய அரசு இவருக்கு வழங்கி கௌரவித்தது. மேலும், "பாரத ரத்னா" விருது பெற்ற மூன்றாவது குடியரசு தலைவர் என்ற பெருமையைப் பெற்றார். 2007-ம் ஆண்டு வரை குடியரசுத் தலைவராக இருந்த இவர் "மக்களின் ஜனாதிபதி" என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்பட்டார். குடியரசுத் தலைவராக பணியாற்றிய காலத்தில் மாணவர்கள் மத்தியில் முழங்கினார். மாணவர்களுக்கு முன்மாதிரியாக விளங்கினார்.

2007-ம் ஆண்டு குடியரசுத் தேர்தலில் மீண்டும் போட்டியிட நினைத்த கலாம், பிறகு பல காரணங்களால் அந்த தேர்தலில் போட்டியிட போவதில்லை என முடிவு செய்து விலகினார்.

குடியரசுத் தலைவர் பதவி காலம் முடிந்தும் மாணவர்கள் மத்தியில் உரையாடி பெரிய தாக்கத்தை ஏற்படுத்திய அப்துல் கலாம் அவர்கள், 2015 ஜூலை 27-ம் நாள் ஷில்லாங்கில் உள்ள ஐ.ஐ.எம். கல்லூரி விழா மேடையில் பேசிக் கொண்டிருந்தபோதே மயங்கி விழுந்து உயிரிழந்தார். நாடே கண்ணீர் அஞ்சலி செலுத்தியது. இந்நாளில் அவரது நினைவலைகளைப் அஞ்சலி செலுத்துவோம்.

**நமது பிறப்பு சம்பவமாக இருக்கலாம். ஆனால், இறப்பு சரித்திரமாக இருக்க வேண்டும்.**

**முனைவர் த.சத்தியசீலன்,**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை.

# "I do"... Photography














**Sushmitha Vadivu A**


(21209106) - II MBA

# B.Com A&F - Career Guidance Talk

**A Seminar on Career guidance talk was delivered Mr.Srinivasan, Lead Trainer, CPBFI, Tamilnadu on 25th July 2022. Students learned about the Industry wants and Students have? Self-managing, Communication Skills, Industry Understanding and Practical knowledge.**



# BCA - Seminar - 26th July 2022












# B.Com BPS & RM - Student Development Program

Online SDP was organized on 27th July 2022. The session was proceeded by Mr.Jai Ganesh, Senior Manager, TCS, Chennai on the topic HR Perspective on Students. 60 Students attended the session.









# B.Com CMA & EDC - Student Entrepreneurship Promotional Program

**Student Entrepreneurship Promotional Program was organized on 27th July 2022. The session was proceeded by Dr. D. Santhanakrishnan, Innovation Ambassador & IEDC Coordinator, Associate Professor & Head B.Com CS, Sri Ramakrishna CAS on the topic "How to Plan for Startup and Legal Ethical Steps". 55 Students have attended the session and benefited by the session.**











# Physics - Taken a pledge of Oath given by Dr.A.P.J. Abdul Kalam on his 7th Death Anniversary









# NSS - Remembering the Missile Man of India (27.07.2022)
























## தினத் தந்தி

26.7.2022 (செவ்வாய்க்கிழமை)



விழாவில் தகவல் உள்ளடக்க குறுந்தகடை ஓமன்நிஸ்வா பல்கலைக் கழக டீன் ஆரோக்கியசாமி சூசைமாணிக்கம் வெளியிட, ஸ்ரீ ராம கிருஷ்ணா கலை, அறிவியல் கல்லூரி முதல்வர் பி.எல்.சிவக்குமார் பெற்றுக்கொண்ட போது எடுத்த படம்.

### ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை கல்லூரியில்

### பேராசிரியர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி

கோவை, ஜூலை.26–

கோவை ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை, அறிவியல் கல்லூரியின், அக மதிப்பீட்டு தரக்குழு (ஐ.கியூ.ஏ.சி) சார்பில், "உயர்கல்வி நிறுவனங்களின் தரத்தை மேம்படுத்துவதற்கான அணுகுமுறைகள்" என்ற தலைப்பில் பேராசிரியர்களுக்கான 5 நாட்கள் திறன்மேம்பாட்டு பயிற்சி முகாம் கல்லூரியில் நேற்று தொடங்கியது. விழாவிற்கு ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை, அறிவியல் கல்லூரி முதல்வர் மற்றும் செயலாளர் பி.எல்.சிவக்குமார் தலைமை தாங்கினார்.

இதில், ஓமன் நிஸ்வா பல்கலைக்கழக டீன் ஆரோக்கியசாமி சூசை மாணிக்கம் கலந்து கொண்டு தகவல் உள்ளடக்க குறுந்தகடை வெளியிட்டார். அவர் பேசும் போது, பேராசிரியர்களுக்கான மேம்பாட்டு பயிற்சியை அனைத்து கல்வி நிறுவனங்களிலும் நடத்த வேண்டும். கற்பித்தலில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. மாணவர்களிடம் கற்பித்தல் தொழில்நுட்பத்தை கையாளுவதை காட்டிலும், கற்றலை மாணவர்களிடம் சேர்க்கும் தொழில்நுட்பத்தை அனைவரும் கையாள வேண்டும் என்றார்.

இதற்கான ஏற்பாடுகளை அக மதிப்பீட்டு தர குழுவினரான கணித துறை தலைவர் என்.உமா, பன்னாட்டு வணிகவியல் துறை தலைவர் ஐ.பர்வீன்பானு, பி.எஸ்.சி.சி.எஸ்.சி.எஸ், துறைத்தலைவர் வி.கிருஷ்ணபிரியா ஆகியோர் செய்துள்ளனர். பயிற்சி முகாமை வணிகவியல் துறைத்தலைவர் வி.நிர்மலாதேவி ஒருங்கிணைத்து வருகிறார்.

2 தினமணி கோவை

### பேராசிரியர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி



கோவை ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை, அறிவியல் கல்லூரியில் திங்கள்கிழமை தொடங்கிய பேராசிரியர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சியின் தொடக்க விழாவில் தகவல் உள்ளடக்க குறுந்தகட்டை வெளியிடுகிறார் சிறப்பு விருந்தினர் ஆரோக்கியசாமி சூசைமாணிக்கம். உடன், கல்லூரி முதல்வர் பி.எல்.சிவகுமார் உள்ளிட்டோர்.

**கோவை, ஜூலை 25:** கோவை ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை, அறிவியல் கல்லூரியில் பேராசிரியர்களுக்கான 5 நாள் திறன் மேம்பாட்டுப் பயிற்சி திங்கள்கிழமை (ஜூலை 25) தொடங்கியது.

ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை, அறிவியல் கல்லூரியின் அகமதிப்பீட்டுத் தரக் குழு (ஐ.கியூ.ஏ.சி.) சார்பில் உயர் கல்வி நிறுவனங்களின் தரத்தை மேம்படுத்துவதற்கான அணுகுமுறைகள் என்ற தலைப்பில் பேராசிரியர்களுக்கான 5 நாள் திறன் மேம்பாட்டுப் பயிற்சி முகாம் கல்லூரியின் கருத்தரங்க கூடத்தில் தொடங்கியது.

தொடக்க விழாவுக்கு கல்லூரியின் முதல்வரும், செயலருமான பி.எல். சிவகுமார் தலைமை வகித்தார். ஓமன் நிஸ்வா பல்கலைக்கழக டீன் ஆரோக்கியசாமி சூசைமாணிக்கம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உள்ளடக்கத்தகவல் குறுந்தகட்டை வெளியிட்டுப் பேசினார்.

இந்த பயிற்சி முகாமில் கல்லூரி பேராசிரியர்கள் பலர் பங்கேற்றுள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை அகமதிப்பீட்டுத் தரக் குழுவினர், கணிதத் துறைத் தலைவர் என்.உமா, பன்னாட்டுவணிகவியல் துறைத் தலைவர் ஐ.பர்வீன்பானு, பேராசிரியர்கள் வி.கிருஷ்ணபிரியா, வி.நிர்மலாதேவி உள்ளிட்டோர் செய்துள்ளனர்.

## தி கோவை மெயில்

தமிழ் & ஆங்கில வாரஇதழ்

www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL

Date : 25 July 2022

### ஸ்ரீ ராமகிருஷ்ணா கல்லூரியில்

### பேராசிரியர்களுக்கான 5 நாள் திறன்மேம்பாட்டுப் பயிற்சி துவக்கம்



COVID IS NOT OVER, FOLLOW THE RULES !

## மாலைமுரசு 26.7.2022 ★



கோவை ராமகிருஷ்ணா கலை கல்லூரியில் நடந்த விழாவில் ஓமன் நிஸ்வா பல்கலைக்கழக டீன் ஆரோக்கியசாமி சூசைமாணிக்கம் தகவல் உள்ளடக்க குறுந்தகடை வெளியிட, ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் மற்றும் செயலர் பி.எல்.சிவக்குமார் பெற்று கொண்டார். அருகில் அகமதிப்பீட்டுக் தர குழுவினர் உமா, பர்வீன்பானு, கிருஷ்ணபிரியா, வணிகவியல் துறைத்தலைவர் நிர்மலா தேவி ஆகியோர் உள்ளனர்.

### ராமகிருஷ்ணா கலை கல்லூரியில் திறன் மேம்பாட்டு பயிற்சி!

கோவை,ஜூலை.26–

கோவை ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின், அகமதிப்பீட்டுத்தரக் குழு (ஐ.கியூ.ஏ.சி.) சார்பில் உயர்கல்வி நிறுவனங்களின் தரத்தை மேம்படுத்துவதற்கான அணுகுமுறைகள்" என்ற தலைப்பில் பேராசிரியர்களுக்கான 5 நாள் திறன் மேம்பாட்டுப் பயிற்சி முகாம், கல்லூரி கருத்தரங்கக் கூடத்தில் இன்று தொடங்கியது.

இதன் தொடக்க விழாவிற்கு ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் பி.எல். சிவக்குமார் தலைமை வகித்தார். மற்றும் செயலர் ஓமன் நிஸ்வா பல்கலைக் கழக டீன் முனைவர் ஆரோக்கியசாமி சூசைமாணிக்கம், விழாவிற்குச் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, உள்ளடக்கத் தகவல் குறுந்தகடு வெளியிட்டுப் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:

பேராசிரியர்களுக்கான மேம்பாட்டு பயிற்சி என்பது மிகவும் முக்கியமானது. இப்பயிற்சியானது இங்கு மட்டுமல்லாது அனைத்து கல்வி நிறுவனங்களிலும் நடத்தப்பட வேண்டும். கற்பித்தலில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. மாணவர்களின் எண்ணமறிந்து செயல்பட வேண்டும். மாணவர்களிடம் கற்பித்தல் கையாளுவதைக்காட்டிலும், கற்றலை மாணவர்களிடம் சேர்க்கும்.

தொழில்நுட்பத்தை அனைவரும் கையாள வேண்டும். அதுதான் கற்றலுக்குக் கைக்கொடுக்கும். அதோடு ஆசிரியர்கள், மாணவர்கள் இடையே நல்லுறவையும் ஏற்படுத்தும். இவ்வாறு அவர் கூறினார்.

இப்பயிற்சி முகாமில் கல்லூரிப் பேராசிரியர்கள் திரளாகப் பங்கேற்றுள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை அகமதிப்பீடுத் குழுவினர் கணிதத்துறைத் தலைவர் என்.உமா, பன்னாட்டு வணிகவியல் துறைத்தலைவர் ஐ.பர்வீன் பானு, பி.எஸ்.சி. சி.எஸ். சி.எஸ். துறைத்தலைவர் வி.கிருஷ்ணபிரியா ஆகியோர் செய்துள்ளனர். 5 நாள் பயிற்சி முகாமை வணிகவியல் துறைத்தலைவர் வி.நிர்மலா தேவி ஒருங்கிணைத்து வருகிறார்.

# Info Corner


पासपोर्ट
PASSPORT
Marketing Motivation
India's
Passport Ranked 87th, Offering Visa-Free/
Visa-On-Arrival Access To 60 Destinations,
Including Nepal, Indonesia, Bhutan & Macau.


OUT OF MY CONTROL
The actions of others
The outcome of my efforts
IN MY CONTROL
The past
My thoughts & actions
What I give my energy to
The future
How I speak to myself
The goals I set
How I spend my free time
How I handle challenges
The opinions of others
My boundaries
How others take care of themselves
What happens around me
What other people think of me

# SRI RAMAKRISHNA
## COLLEGE OF ARTS & SCIENCE (Autonomous)

A Unit of M/s SNR Sons Charitable Trust

SNR SONS TRUST

Co-Ed, Accredited by NAAC with A+ Grade, Ranked 84th in NIRF 2021 | An ISO 9001:2015 Certified Institution

## PROGRAMMES OFFERED

### COMMERCE - UG
B.Com, B.Com (CA), B.Com (PA), B.Com (BPS), B.Com (IB), B.Com (IT), B.Com (CS), B.Com (B&I), B.Com (RM), B.Com (CMA), B.Com (A&F)

### MANAGEMENT SCIENCE - UG
BBA, BBA (CA)

### COMPUTING - UG
BCA, B.Sc (CS), B.Sc (IT), B.Sc (CS&CS),
B.Sc Computer Science and Data Analytics
B.Sc Computer Science
(Artificial intelligence and Data Science)

### SCIENCE AND HUMANITIES - UG
B.Sc (Electronics and Communication Systems), B.Sc (Maths), B.Sc (Physics), B.Sc (Chemistry), B.Sc (Biotechnology), B.Sc (CS & HM), B.A (Eng. Lit.),

### POST GRADUATE PROGRAMMES
MBA (AICTE Approved), MSW, M.Com, M.Com (IB), M.Sc (CS), M.Sc (IT), M.Sc (Maths), M.Sc (Electronics and Communication Systems), M.Sc (Biotechnology), M.A (Eng.Lit.)

**INTERNATIONAL EXPOSURE**

Do your Course/Semester abroad at
- Asia Pacific University, Malaysia
- Sunway University, Malaysia

**STATE-OF-THE-ART INFRASTRUCTURE**
- Flood Lit - Cricket
- Flood Lit - Fives Football
- Badminton, Basketball

**INDUSTRY INTEGRATION**
- Tata Consultancy Services
- IBM
- Google Certification
- TCS ION
- MAAC

**RANKED IN TOP 50 COLLEGES (ALL INDIA) BY LEADING MAGAZINES**

**SPECIAL FEATURES**
- ★ 27 Clubs for societies
- ★ 89 Job/Skill oriented courses
- ★ MOE's Innovation Centre for Idea to Innovation
- ★ DBT Star College
- ★ Sports scholarship for National and State Level Players

Medical concession to students, staff, parents and alumni at Sri Ramakrishna Hospital

www.srcas.ac.in




7373085666 | 9942320001

# ADMISSIONS OPEN
## FOR THE YEAR 2022 - 2023

# SRI RAMAKRISHNA

## COLLEGE OF ARTS & SCIENCE (Autonomous)

Formerly SNR Sons College

**Re-Accredited with 'A+' Grade by NAAC**

**Ranked 90th in NIRF 2022**

**Coimbatore - 641 006, India.**



## CONVENOR

**Dr.D.Sampath Kumar**

Associate Professor - Information Technology

## COORDINATORS

**Media**

**Dr.T.Sathiyaseelan**

Assistant Professor - Tamil

**Technical**

**Dr.P.Manikandaprabhu**

Assistant Professor - Computer Science

dailynews@srcas.ac.in

SRCAS/IQAC/Pulse/2022-28